DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.72/2024

PW - 1

| | | |
|---|---|---|
| Name | : | லெட்சுமி (Lw - 1) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Cast | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------25

**(1 முதல் 5 எதிரிகள் ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 05.08.2025**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம் சிங்கலாந்தபுரத்தில் குடியிருந்து கூலிவேலை செய்துவருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனக்கு பங்காளிகள் ஆவார்கள். (சாட்சி எதிரிகளை அடையாளம் காண்பித்தார்.)

எனது சின்ன மாமனார் முருகேசனுக்கு சொந்தமான வீட்டை நாங்கள் கிரையம் பெற்றோம். ஆஜர்எதிரிகளுக்கு சொந்தமான வீடு கிரையம் ஆகாமல் இருந்தது. அதனால் ஆஜர் எதிரிகள் எங்களிடம் மூல பத்திரத்தை தருமாறு கேட்டார்கள். எங்களிடம் மூல பத்திரம் இல்லை என்பதால் நான் அவர்களிடம் மூலபத்திரம் எங்களிடம் இல்லை என்று கூறினேன். 26.07.2021ம் தேதி காலை 10.30 மணியளவில் தண்ணீர் பிடிப்பதற்காக நான் வீட்டிற்கு வெளியில் இருந்தபோது ஆஜர் எதிரி பெருமாயி, ஆஜர் எதிரிகள் சுரேஷ், ரமேஷ் ஆகியோர் வந்து பெருமாயி என்னிடம் தேவடியா நீ மட்டும் கிரையம் பண்ணிவிட்டு எனக்கு மூலபத்திரம் கொடுக்க மறுக்கிராயா என்று கூறி எனது முடியை பிடித்து அடித்தார்.

ஆஜர் எதிரிகள் சுரேஷ் மற்றும் ரமேஷ் ஆகியேர்கள் என்னை தேவடியா,

கண்டாரஓலி மூலபத்திரத்தை வைத்துகொண்டு தரமறுக்கிராயா நாங்கள் எப்படி கிரையம் செய்வது என்று கூறி என்னை அடித்தார்கள். ஆஜர் எதிரிகள் ரமேஷ் மற்றும் சுரேஷ் சிறிய கத்தியால் எனது முகத்தில் மூக்கு மற்றும் வலது கண்ணத்தில் குத்தி காயம் ஏற்படுத்தினார்கள். ஆஜர் எதிரி அஞ்சலை தேவி எனது முதுகில் காலால் உதைத்தார். ஆஜர் எதிரி சாந்தி கையால் எனது முதுகில் அடித்து காயத்தை ஏற்படுத்தினார்.

நான் மயங்கிவிட்டேன். என்னை எனது சகோதரி சாட்சி 4 விஜயா பேளுக்குறிச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். மேல் சிகிச்சைக்காக நான் சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். போலிசார் நான் மருத்துவமனையில் இருந்தபோது என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(**புகார் வாக்குமூலம் அ**.**சா**.**ஆ**.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எனக்கு எழுதபடிக்க தெரியுமா என்றால் தெரியும். நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். இந்த சம்பவத்திற்கு முன்பே எனக்கும் எதிரிக்கும் மூல பத்திரம் சம்மந்தமாக விரோதம் உள்ளது என்றால் சரிதான். நான் எனது புகார் வாக்குமூலத்தில் சம்பவத்தை யாரும் பார்க்கவில்லை என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. சாந்தி, சுமதி ஆகியோர் பார்த்ததாக சொல்லியுள்ளேன். சம்பவம் நடந்து எத்தனை நாட்கள் கழித்து போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் இரண்டு நாட்கள் கழித்து விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரித்தபோது நான் மயக்க நிலையில் இருந்தேன் என்றால் சரிதான். எனக்கு இரத்த காயம் ஏற்பட்டதாக சொல்லியுள்ள நிலையில் மேற்படி இரத்தகரை படிந்த எனது உடைகளை போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. உண்மையில் எனக்கு இரத்த காயம் ஏற்பட்டு இருந்தால் என்னுடைய உடைகளை போலிசாரிடம் ஒப்படைத்திருப்பேன் என்றால் சரியல்ல. சம்பவம் அனைத்தும் எனது வீட்டில் தான் நடந்தது என்றால் சரிதான். 1ம் எதிரி பெருமாயி அவரை நாங்கள் அடித்ததாக எங்கள் மீது புகார் கொடுத்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நடந்தது என்றால் சரிதான். புகாரில் உள்ள கையொப்பம் மட்டும்தான் என்னுடையது என்றும் அதில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது என்றாலும் சரியல்ல. புகாரில் என்னை தவிர வேறு யாரும் கையொப்பம் போடவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகள் இரண்டுபேர்

கையொப்பம் செய்தார்கள். நான் சொல்வதுபோல் சம்பவம் நடக்கவில்லை என்றும் எனக்கும் எதிரிகளுக்கும் முன்விரோதம் இருந்ததால் அவர்கள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல நான் புகார் கொடுக்கவில்லை என்றாலும் நான் மயக்கநிலையில் இருந்ததால் போலிசார் என்னிடம் வெற்றுதாளில் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowlweldge by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**